# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2460/36 - 2025 ඔක්තෝබර් මස 31 වැනි සිකුරාදා - 2025.10.31

2460/36 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நீதிச்சேவைகள் ஆணைக்குழு**

நீதிச்சேவை ஆணைக்குழு விதிகளைத் திருத்துதல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதியுடைய 14 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியின் அரசாங்க அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கு அமைவாக II ஆம் பிரிவில் "நீதிமன்ற அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம்" கீழ் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் நீக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதியுடைய 2326/31ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் அரசாங்க அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள தகைமைகள் நீதிச்சேவை உள்ளடக்கப்படுவதாக இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

**இலங்கை நீதிச் சேவையின் II ஆவது வகுப்பின் I ஆவது தரத்திற்குரிய (நீதவான்) பதவி**

**தகைமைகள்**

(அ) மூன்று வருடங்களுக்குக் குறையாத காலம் செயற்பாட்டு ரீதியிலான வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் பெற்று மூன்று வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தராக சேவையில் ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

(இ) ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக மூன்று வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருப்பதுடன் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தின் முன் தோன்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக மூன்று வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** மேலே (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "மூன்று வருடங்களுக்குக் குறையாத" சேவைக்காலம் / செயற்பாட்டு ரீதியான தொழில்வாண்மை காலத்தை கணக்கிடும் போது, மேலே (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிப்பிடப்படும் சேவைக்காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில்வாண்மை காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

**பிரசன்ன அல்விஸ்**,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2025, ஒற்றோபர் 31.

EOG 10-0294